**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி, திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் வியாழக்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி மாதம் 29 ஆம் நாள்)**

**அசல் வழக்கு எண்.254/2024**

**[TNDG07 – 000902 – 2024]**

**கனரா வங்கி, மானூர் கிளை,**
**பழனி வட்டம், அதன் மேனேஜர் மூலம் --- வாதி**

**/எதிர்/**

**1. ராமகிருஷ்ணன்**
**2. தெண்டபாணி --- பிரதிவாதிகள்**

**இந்த வழக்கானது 20.09.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 03.03.2026 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் S. பழனிச்சாமி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினர்களாக இருந்தும், வாதி தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,**

**தீர்ப்புரை**

**தாவா தொகை ரூ.4,44,079/-ம், அதற்கு பிராது தேதி முதல் தொகை முழுவதும் செலுத்தும் வரை 10.55 சதவீதம் பின்வட்டியும், தாவா செலவுத் தொகையையும் சேர்த்து வாதி வங்கிக்கு பிரதிவாதிகளை செலுத்திவைக்கக்கோரி வாதி வங்கியால் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**2. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு : –**

2.1. 1–ம் பிரதிவாதி 2–ம் பிரதிவாதியின் மகன் ஆவார். 1–ம் பிரதிவாதி திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், தாளையூத்து கிராமத்தில் இருக்கும் ஸ்ரீபாலமுருகன் பாலிடெக்னிக்கல் கல்லூரியில் 3 வருட மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பட்டப்படிப்பு படிப்பதற்கு 1–ம் பிரதிவாதியின் படிப்பு செலவிற்கு கல்விக் கடன் ரூ.88,000/– கேட்டு பிரதிவாதிகள் இருவரும் வாதி வங்கியில் 10.12.2009 ஆம் தேதியில் மனு செய்ததில், அம்மனு பரிசீலிக்கப்பட்டு கணக்கு எண்.1535651013914–ல் அங்கீகாரம் பெற்று கல்விக் கடன் தொகையை வாதி வங்கி மூலம் பெற்றுக்கொண்டனர். மேற்படி கடன் தொகைக்கு ரூ. 11 சதவீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டனர். தற்போது ரூ.10.55 சதவீதம் வட்டி செலுத்தி வைக்கவேண்டும். அதற்கு ஆதரவாக பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து வாதி வங்கிக்கு ஒரு கல்விக் கடன் கொதுவை ஒப்பந்தம் 10.12.2009 அன்று எழுதிக்கொடுத்தனர். 3 வருட பட்டப்படிப்பு முடிந்து 1 வருடம் கழித்து அல்லது படிப்பு முடிந்து வேலை கிடைத்து 6 மாதம் கழித்து இதில் எது முந்தியதோ அந்தக் கெடுவில் இருந்து பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து மாதம் 1–க்கு ரூ.1,200/– வீதம் 60 மாதங்களில் மொத்தக் கடனையும் வட்டியுடன் சேர்த்து பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்தும், தனித்தனியாகவும் செலுத்தி வைக்க ஒப்புக்கொண்டுள்ளனர். கல்விக் கடனின் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதாகவும், ரிசர்வ் வங்கியின் உத்தரவிற்கிணங்க வட்டி விகிதத்தில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களுக்கு கட்டுப்படுவதாகவும் பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்தும், தனித்தனியாகவும் உறுதி அளித்துள்ளனர். 1–ம் பிரதிவாதியின் கல்விக் கடனுக்கு மற்ற பிரதிவாதி இருவரும் கூட்டுக் கடனாளியாக இருப்பதாலும் அது தொடர் ஜாமீனாக இருப்பதாலும், ஒரு பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன் பத்திரங்கள் மற்றும் உயிர்ப்புக் கடிதங்கள் ஆகியவை மற்ற பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தும் என்பதால் தாவாத் தொகை காலாவதி ஆகவில்லை. அவைகளை வசூலிக்க வாதி வங்கிக்கு அனைத்து உரிமைகளும் உள்ளது. மேற்படி கல்விக் கடனை செலுத்துவதாக ஒப்புக்கொண்டுவிட்டு பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து 14.07.2011 மற்றும் 03.06.2014 ஆகிய தேதிகளில் வாதி வங்கிக்கு உயிர்ப்புக் கடிதங்கள்

எழுதிக்கொடுத்துள்ளனர். பிரதிவாதிகள் இருவரும் தனித்தனியாக 07.05.2016 அன்று வாதி வங்கிக்கு உயிர்ப்புக் கடிதம் எழுதிக்கொடுத்துள்ளனர். மேலும் பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து வாதி வங்கிக்கு 02.10.2018, 12.08.2019 மற்றும் 10.06.2022 ஆகிய தேதிகளில் உயிர்ப்புக் கடிதங்கள் எழுதிக்கொடுத்தனர். அதனால் தாவாத் தொகை காலாவதியாகவில்லை. அதனால் கல்விக் கடனை ஒப்புக்கொண்டபடி பிரதிவாதிகள் செலுத்தி வைக்காததால் 29.12.2021 ஆம் தேதியில் வழக்கறிஞர் மூலம் அறிவிப்புக் கொடுத்ததில் அதனைப் பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு ஏதும் இல்லை. பணத்தையும் செலுத்திவைக்கவில்லை. பலமுறை நேரில் துயர்ந்தும் பிரதிவாதிகள் மேற்படி கடனை செலுத்தி வைக்க முன்வரவில்லை. பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்தும், தனித்தனியாகவும் செலுத்தி வைக்க கடமைப்பட்டுள்ளார்கள். படிப்பு முடிந்து பல ஆண்டுகள் ஆகியும் தாவாக் கடனைச் செலுத்திவைக்கவில்லை. எனவே வாதி வங்கியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக இருந்து வருகிறார்கள்.

**5. இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் விவரம் :–**

இவ்வழக்கின் வாதி வங்கி தரப்பில் வங்கியின் மேலாளர் திரு. தனுஷ் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இந்த வழக்கில் தீர்வுக்குற்ற பிரச்சனை யாதெனில் வாதி வங்கி கோரிய கடன் தொகை ரூ.4,44,079/–ஐ வட்டியுடன் பெற உரிமையுடையவரா? என்பதேயாகும்.

**6. தீர்வு:**

இந்த வழக்கில் வாதி வங்கி கோரிய பரிகாரம் வாதி வங்கிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதை இந்த நீதிமன்றம் கவனத்துடன் பரிசீலனை செய்து பார்த்தபொழுது, வழக்குரை, வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வாதி வங்கியின் கிளை மேலாளர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் வாதி

தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆன கடன் விண்ணப்பம், வா.சா.ஆ.2 ஆன கொதுவை ஒப்பந்தத்தை பரிசீலிக்கும்போது, அதில் பிரதிவாதிகள் கடந்த 10.12.2009 ஆம் தேதியில் கல்விக் கடன் வேண்டி வாதி வங்கியில் விண்ணப்பித்து மேற்படி கடன் 10.12.2009 ஆம் தேதி ரூ.88,000/-ஐ வங்கியின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வாதி வங்கியில் கணக்கு எண்.1535651013914 என்ற எண்ணில் கடனாக பிரதிவாதிகள் வாங்கிக்கொண்டு மேற்படி தொகைக்கு ஆதரவாக 10.12.2009 ஆம் தேதி கொதுவை ஒப்பந்தம் எழுதிக்கொடுத்துள்ளனர் என்றும், வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.9 வரையிலான உயிர்ப்புக் கடிதங்களை பரிசீலிக்கையில், வாதி வங்கியில் பிரதிவாதிகள் ரூ.88,000/- கடன் பெற்றுக்கொண்டு வாதி வங்கிக்கு 14.07.2011, 03.06.2014, 07.05.2016, 07.05.2016, 02.10.2018, 12.08.2019 மற்றும் 10.06.2022 ஆகிய தேதிகளில் உயிர்ப்புக் கடிதங்களில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளனர் என்றும், ஒப்புக்கொண்டபடி கடன் தொகையை பிரதிவாதிகள் செலுத்தாததால் வாதி வங்கி பிரதிவாதிகளுக்கு 29.12.2021 அன்று வா.சா.ஆ.10 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும், வா.சா.ஆ.11 ஆன கடன் கணக்குப் பட்டியலைப் பரிசீலிக்கையில், வாதி வங்கியிலிருந்து 2-ம் பிரதிவாதியின் கணக்கிற்கு ரூ.88,000/- தொகை 10.12.2009 ஆம் தேதி வரவு வைக்கப்பட்டுள்ளது என்பது அறிய முடிகிறது. மேற்சொன்ன அனைத்து ஆவணங்களையும் நன்கு பரிசீலனை செய்ததில், பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து 10.12.2009 ஆம் தேதி ரூ.88,000/-ஐ கல்விக்கடனாகப் பெற்றுள்ளார்கள் என்பது நிரூபணமாகிறது.

7. மேலும் பிரதிவாதிகள் அசல் மற்றும் வட்டித் தொகையை திரும்பச் செலுத்தவில்லை என வா.சா.1 வங்கியின் மேலாளர் தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். வாதி வங்கியின் கூற்றைப் பிரதிவாதிகள் தரப்பில் மறுதலிக்கப்படவில்லை.. பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாமலும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக இருந்துள்ளார்கள். எனவே வாதியின் வழக்கானது வாதி தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே வாதி வங்கியில் பராமரிக்கப்படும் பிரதிவாதிகளின் வங்கி கணக்கு நகலான வா.சா.ஆ.11-ன்படி தாவாத் தொகை ரூ.88,000/-யும்,

**அதற்குரிய பின்வட்டியும் மற்றும் வழக்கின் செலவு தொகையை வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் செலுத்திவைக்கக் கடமைப்பட்டுள்ளார்கள் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.**

**8. இறுதியாக இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு பிரதிவாதிகள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாவாத் தொகை ரூ.4,44,079/-யும், மேற்படி தொகைக்கு தாவாத் தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டொன்றுக்கு 9 சதவீதம் வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை ஆண்டொன்றுக்கு 6 சதவீதம் பின்வட்டியுடன் தாவா செலவு தொகையையும் சேர்த்து செலுத்திவைக்கவேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் ஆகிய இன்று என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.**

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2026.03.12 16:37:32 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

| **வாதி தரப்பு சாட்சி : -** | | |
|---|---|---|
| **வரிசை எண்.** | | **சாட்சியின் பெயர்** |
| வா.சா.1. | : | திரு. தனுஷ் - (வாதி வங்கியின் மேலாளர்) |

| **வாதி தரப்பு சான்றாவணங்கள் : -** | | | |
|---|---|---|---|
| **வரிசை எண்** | **நாள்** | **ஆவணப்பெயர்** | **ஆவணத் தன்மை** |
| வா.சா.ஆ.1. | 10.12.2009 | பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து வாதி வங்கியில் ஆஜர்படுத்திய கடன் விண்ணப்பம் | அசல் |
| வா.சா.ஆ.2. | 10.12.2009 | பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து கல்விக் கடனுக்கு எழுதிக்கொடுத்த கொதுவை ஒப்பந்தம் | அசல் |
| வா.சா.ஆ.3. | 14.07.2011 | பிரதிவாதிகளின் உயிர்ப்புக் கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.4. | 03.06.2014 | பிரதிவாதிகளின் உயிர்ப்புக் கடிதம் | அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.5. | 07.05.2016 | 1–ம் பிரதிவாதியின் உயிர்ப்புக் கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.6. | 07.05.2016 | 2–ம் பிரதிவாதியின் உயிர்ப்புக் கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.7. | 02.10.2018 | பிரதிவாதிகளின் உயிர்ப்புக் கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.8. | 12.08.2019 | பிரதிவாதிகளின் உயிர்ப்புக் கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.9. | 10.06.2022 | பிரதிவாதிகளின் உயிர்ப்புக் கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.10. | 29.12.2021 | பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.11. | 15.11.2024 | பிரதிவாதிகளின் கல்விக் கடன் வங்கிக் கணக்கு | உண்மை நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2026.03.12 16:37:38 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி
அ.வ.எண்.254/2024
**தெளிவு/வரைவு தீர்ப்புரை**
நாள் : 11.03.2026